தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-8-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூவன் வாழையின் விலை நிலையாக இருக்கும்

உலகளவில் வாழை 5.15 மில்லியன் எக்டேரில் பயிரிடப்பட்டு 106.54 மில்லியன் டன்கள் பழங்கள் உற்பத்தியாகின்றன, 2011-ல் இதன் சராசரி உற்பத்தி எக்டருக்கு 20.7 டன் என்ற அளவில் இருந்தது. 2011-ல் உலக வாழை உற்பத்தியில் 27.8 சதவீதம் பங்களித்து இந்தியா முதன்மை இடத்தை வகிக்கிறது. தமிழ்நாடு 1.25 இலட்சம் எக்டர் பரப்பளவில் இருந்து 82.53 இலட்சம் டன் வாழைப் பழங்கள் உற்பத்தி செய்து, இந்தியாவில் அதிக உற்பத்தி செய்யும் மாநிலமாக உள்ளது.

வாழை வகைகளில் பூவன் முக்கியமான ஒன்றாகும். குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ப வளரும் பூவன் வகைகளானது கேரளாவில் பாளையம்கோடான் எனவும் தமிழகத்தில் பூவன் எனவும், ஆந்திரப் பிரதேசத்தில் கற்பூர சக்கரகேலி எனவும், வடகிழக்கு பகுதியில் ஆல்பன் எனவும் பயிரிடப்பட்டு வருகிறது.

தட்பவெப்பம் மற்றும் மண் சூழ்நிலைகளால் பூவன் வாழை உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி வகிக்கிறது. வணிக ரீதியாக தமிழ்நாடு மற்றும் கேரளாவில் சில பகுதிகளில் இலை உற்பத்திக்காகவும் பூவன் பயிரிடப்படுகிறது. பூவன் பழங்கள் சற்று அமிலத் தன்மையும் மற்றும் பொதுவான புளிப்பு-இனிப்பு வாசனையும் கொண்டது.

பழங்கள் பழுக்கும் போது கவர்ச்சிகரமான தங்க மஞ்சள் நிறம் அடைகிறது. பூவன் தார்கள் நடுத்தர அளவிலானது. சீப்புகள் நெருக்கமாகவும், நீண்ட நாள் கெடாமல் இருப்பதற்கான தரமும் மற்றும் பழங்கள் விரிசல் எதிர்ப்புத் தன்மையும் கொண்டது.

தமிழ்நாட்டில் முக்கியமாக கோயம்புத்தூர், திருச்சி, கடலூர், விழுப்புரம், ஈரோடு, புதுக்கோட்டை, தேனி, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பூவன் பயிரிடப்படுகிறது. பூவன் பிப்ரவரி- ஏப்ரல் மற்றும் நவம்பர்- டிசம்பர் ஆகிய மாதங்களில் நடவு செய்யப்படுகிறது.

அதிகமான வரத்துக்கள் அக்டோபர் - ஜனவரியிலும், குறைந்த வரத்துக்கள் பிப்ரவரி - மே மாதங்களிலும் சந்தைக்கு வருகின்றன. தற்போது சந்தை விலை கிலோ ஒன்றுக்கு ரூ.21-24 ஆகும். வரும் மாதங்களில் அறுவடை விலைகள் பற்றி விவசாயிகள் அறிந்து செயல்பட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கி வரும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையம் கோயம்புத்தூர், இரத்தின சபாபதிபுரம் உழவர் சந்தையில் 10 வருடங்களாக நிலவிய பூவன் விலைகளை ஆராய்ந்தது. இதன்படி கோயம்புத்தூர் உழவர் சந்தையில் பூவன் பழங்களுக்கு 2013 ஆகஸ்ட் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.21 முதல் 23 வரை கிடைக்கும், பண்டிகை காலங்களான செப்டம்பர் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.22 முதல் 25 வரை கிடைக்கும். அதன் பின்னர் அக்டோபர் மாதத்தில் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.20 முதல் 23 வரை நிலையாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-</u>**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி : 0422 -2431405


**<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-</u>**


பேராசிரியர் மற்றும் தலைவர்
பழ பயிர்கள் துறை,
தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி : 0422-6611269


மக்கள் தொடர்பு அலுவலர்